8th November 1966]

புலவர் கா. கோவிந்தன் : காணுமல் போனவர்கள், இறந்தவர்களுடைய எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து வந்தவர்களாகத் தெரிகிறது. இந்த நிலைமை அந்த மாவட்டத்தின் வறுமையைக் காட்டுவதாக இருக்கிறதா ? அப்படியானல் அங்கே வறுமையைப் போக்கக்கூடிய அளவில், வட ஆற்காடு மாவட்டத்தை வளம்படுத்த ஏதாவது திட்டங்கள் போடுவதற்கு முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வீரத்தைக் காட்டுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உயிரைக் கொடுத்து நாட்டைப் பாதுகாத்த வீரர்களைப்பற்றி இம்மாதிரி கனம் அங்கத்தினர் பேசுவது அவதூருகும். ஏதோ கூலிக்குப் போகிருர்கள் என்று தெரியாதவர்கள் தான் சொல்வார்கள். இந்த மன்றத்திலுள்ள கனம் அங்கத்தினர் அவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற உணர்ச்சி இருந்தால் அந்த மாவட்டத்திலிருந்து அதிகமான பேர்கள் நாட்டைப் பாதுகப்பதற்காகச் சென்றிருக்கிருர்கள் என்பது பற்றிப் பெருமைப்பட வேண்டும்.

புதிய பஸ் வழிகள்

*503 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை to பெங்களூர் வேறு புதிய மார்க்கங்களில் அரசாங்க பஸ் விட உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த வழியாக ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) சென்னையிலிருந்து ராணிப்பேட்டை, சித்தூர், பலமனேர் வழியாக பெங்களூர் செல்லும் பஸ் வழித்தடத்தில் பஸ் விடுவதைப்பற்றி செயற்குறிப்பு ஆலோசனையிலுள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்பொழுது அந்த வழியாக போகக்கூடிய பஸ்களை சித்தூர், அரக்கோணம் வழியாக பெங்களூருக்கு விடுவதற்கு யோசனை உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னல், எந்த வழியாகப் போகவேண்டும் என்பதும் சேர்த்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மின்சார வசதி

*504 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இளம்பிள்ளை கிராமப் பஞ்சாயத்துப் பகுதியிலும், சில கிராமங்களிலும் இன்னும் மின்சார வசதியளிக்காமல் இருப்பது உண்மையா ?